## உங்கள் பொறுப்புகள்

எங்கள் நோயாளி என்ற முறையில் உங்கள் நலனை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருந்தாலும், சிகிச்சை காலம் முழுவதும் நீங்களும் உங்கள் கடமைகளை சரியாகச் செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும், மற்றும் உங்கள் குடும்பத்தாரின் கவலையைப் போக்கக்கூடிய சிறந்த சிகிச்சை பராமரிப்பை அளிக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும். உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் பின்வருவனவற்றை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்:

1. நாங்கள் உங்களுக்கு உதவுவதற்கு, உங்கள் மருத்துவ வரலாற்றில் முழுமையான தகவலை (உங்களுக்கிருக்கக்கூடிய ஒவ்வாமைகள், நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகள்), நிதி நிலைமை மற்றும், மற்ற பொருத்தமான விவரங்களை அளிக்கவும். இதில் கர்ப்பம் கலைக்கப்பட்டது, மனித நோய்த்தடுப்புக்குறை வைரஸ் (ஹெச்ஐவி) நிலை, மனநோய் போன்ற மிக முக்கியமான மருத்துவ தகவலும் அடங்கும். இது உங்கள் மருத்துவப் பராமரிப்பில் பங்கேற்கும் சுகாதாரப் பராமரிப்பு குழுவுடன் பகிர்ந்துகொள்ளப்படலாம். உங்கள் சுகாதாரம் பாதுகாக்கப்படுவதை மற்றும் உகந்த மருத்துவ பராமரிப்பு அளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதே இவ்வாறு பகிர்வதன் நோக்கம். தகவல் நடப்பிலுள்ள சட்டங்களுக்கிணங்க கையாளப்படும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.
2. எங்கள் மருத்துவ வல்லுநர்களால் அளிக்கப்படும் சிகிச்சைத் திட்டங்களுக்கு இணங்கிச் செயலாற்றுங்கள்.
3. சிகிச்சை திட்டங்களுக்கு இணங்கி செயலாற்றத் தடையாக உங்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அது குறித்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
4. உங்கள் மருத்துவ நிலையில் ஏதேனும் மாற்றம் இருந்தால் அது குறித்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
5. உங்களுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சேவைகளுக்கான கட்டணத்தைப் பொறுப்புடன் சரியான நேரத்தில் செலுத்திவிடுங்கள்.
6. உங்களால் முடியாத போது, உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற உங்கள் சார்பில் முடிவு எடுக்கும் ஒருவரை நியமித்திடுங்கள்.
7. அனைத்து அலுவலர்களையும், மற்ற நோயாளிகளையும் மற்றும் வருகையாளர்களையும் தகுந்த மரியாதையுடன் அன்புடன் நடத்துங்கள்.
8. வருகையாளர் கொள்கை போன்ற மருத்துவமனை விதிமுறைகளை கடைபிடியுங்கள்.
9. உங்களுக்கு கொடுக்கும் அறிவுரைகள் குறித்து உங்களுக்கு சரியாகத் தெரியவில்லை என்றால் கேள்விகள் கேளுங்கள். அப்போதுதான் மருத்துவமனையிலிருந்து நீங்கள் டிஸ்சார்ஜ் ஆனப் பிறகு உங்களால் உங்களை நன்கு பார்த்துக் கொள்ள முடியும் என்பதை எங்களால் அறிய முடியும்.

## கருத்து

எங்கள் நோயாளிகளுக்கு வழங்கும் சேவைகளை மேம்படுத்துவதற்காக நாங்கள் மேற்கொள்ளும் தொடர் முயற்சிகள் பற்றிய உங்கள் கருத்துகளை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். உங்களுக்கு ஏதேனும் பரிந்துரைகள் இருந்தால் அல்லது எங்கள் சேவைப் பற்றிய உங்கள் அனுபவத்தை எங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பினால் தயவுசெய்து நோயாளி அனுபவ ஆய்வை பூர்த்தி செய்யவும், அல்லது நோயாளி அனுபவ அலுவலகத்தை +1800-293-3297 என்ற எண்ணில் அழைக்கவும். மாறாக, **www.kkh.com.sg** என்ற எங்கள் இனையத்தளம் மூலமாகவும் நீங்கள் எங்களைத் தொடர்புகொள்ளலாம்.

குறிப்புகள்

[1] உயர்தர மருத்துவ வழிகாட்டி என்பது ஒரு சட்டப்பூர்வ ஆவணமாகும். உங்களுக்கு உயிர் போகும் அளவுக்கு நோய் தாக்கியிருந்தால் மற்றும் சுய நினைவின்றி இருக்கும் சமயத்தில், உங்கள் உயிரை நீட்டிக்கக் கூடிய எந்த சிகிச்சையும் உங்களுக்குத் தேவையில்லை என்று உங்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவருக்கு முன்கூட்டியேத் தெரிவிக்க உதவும் ஆவணமாகும்.

[2] மின்னியல் மருத்துவ பதிவேடு பரிமாற்றம் (EMRX) என்பது சுகாதார அமைச்சு மற்றும் இரண்டு பொது உடல்நல பராமரிப்பு குழுமங்கள், சிங்ஹெல்த் (இதில் கே கே மருத்துவமனை ஓர் அங்கமாகும்) மற்றும் தேசிய சுதாரக் குழு மின்னியல் மருத்துவ பதிவேடுகளை சிங்கப்பூரில் உள்ள அனைத்து பொது மருத்துவமனைகள் மற்றும் பலதுறை மருந்தகங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக மேற்கொண்ட ஒரு முயற்சியாகும். EMRX மூலமாக உங்கள் சிகிச்சைப் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள அலுவலரால் உங்களுக்கான தனித்தன்மை வாய்ந்த தேவைகளை சிறப்பாகவும் விரைவாகவும் வழங்கிட முடியும். பின்வரும் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படும்:

- சமீபத்தில் நீங்கள் மருத்துவமனையில் தங்கியிருந்த தகவல்கள் அடங்கிய பதிவேடுகளின் சுருக்கவுரை
- ஆய்வுக்கூடம், எக்ஸ்-ரே மற்றும் ஏனைய கதிரியக்க பரிசோதனை முடிவுகள்
- அறுவை சிகிச்சை அறிக்கைகள்
- பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள்

உயர்தர மருத்துவ வழிகாட்டிகள் மற்றும் EMRX குறித்து மேலும் தெரிந்துகொள்ள தயவுசெய்து சுகாதார அமைச்சின் **www.moh.gov.sg** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.

KK Women's and Children's Hospital
SingHealth

100 Bukit Timah Road
Singapore 229899
**தொலைபேசி:** 6-CALL KKH (6-2255 554)
**தொலைப்பிரதி:** 6293 7933
**இணையத்தளம்:** www.kkh.com.sg
www.facebook.com/kkh.sg

Reg No 198904227G AOPEprr(T)0917

KK Women's and Children's Hospital
SingHealth

# நோயாளியின் உரிமைகளும் பொறுப்புகளும்

நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஓர் உறவு

PATIENTS. AT THE HEART OF ALL WE DO.®

## நோயாளி மற்றும் அவர்கள் குடும்பத்தின் நலனைப் பாதுகாத்தல்

KK பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை (KKH) தரமான சேவைகள் வழங்கவும், நோயாளிகளுக்கு சிறந்த பலன்கள் கிடைப்பதை உறுதிசெய்யவும் கடப்பாடுக் கொண்டுள்ளது. பரிவு, ஒருமைப்பாடு மற்றும் கூட்டுமுயற்சி ஆகிய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட தரமான சுகாதார பராமரிப்பை உங்களுக்கு, எங்கள் நோயாளிகளுக்கு மற்றும் உங்கள் குடும்பத்தாருக்கு வழங்கி சேவை செய்ய வேண்டும் என்பதை நாங்கள் குறிக்கோளாக கொண்டுள்ளோம். உங்கள் சுகாதார பராமரிப்பு வழங்குநராக வயது, மொழி, இனம், மதம் அல்லது சமூக அந்தஸ்து ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் உங்கள் நல்வாழ்வை பாதுகாக்க உங்கள் மருத்துவ நிலைக்கு சிகிச்சை அளிக்க எங்கள் மருத்துவ வல்லுநர்கள் பெருமுயற்சி மேற்கொள்வார்கள்.

KKH-ல் உங்களுக்கான மருத்துவப் பராமரிப்பு, உள்ளூர் அதிகாரிகளால் முறையாக உரிமம் வழங்கப்பட்ட ஆண் மற்றும் பெண் சுகாதாரப் பராமரிப்பு வல்லுநர்களால் வழங்கப்படுகிறது.

## பராமரிப்பும் மரியாதையும்

1. KK மருத்துவமனையில் ஒரு அன்பான மற்றும் பாதுகாப்பான சூழலில் நீங்கள் மரியாதையுடன் நடத்தப்படுவீர்கள். உங்களது சிகிச்சைக்குத் தேவைப்பட்டாலொழிய உங்கள் தனிநபர் பாதுகாப்பில் உடல்சார்ந்த கட்டுபாடுகள் அல்லது தனிமைப்படுத்துதல் ஆகியவை இருக்காது. உடல் குறைபாடு உள்ளவர்கள், முதியவர்கள் மற்றும் சிறப்புத் தேவை உள்ளவர்கள் ஆகியோருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும்.
2. உங்கள் தனிநபர் பண்புகள், மத மற்றும் இனம் சார்ந்த நம்பிக்கைகள் மற்றும் உங்களுக்கு தனிமைத் தேவைப்படும் என்பனவற்றை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். மற்றவர்களிடையே இணக்கமின்மை மற்றும் வேறுபாடுகளை ஏற்படுத்தாத வரை உங்களுடைய மத மற்றும்/அல்லது இனம் சார்ந்த பழக்கங்கள் குறித்து நீங்கள் எங்களிடம் தெரிவிக்கலாம். உங்களுக்கு இந்த விஷயங்களில் உதவித் தேவைப்பட்டால், உங்கள் அறையில் உள்ள தாதியிடம் அது குறித்துத் தெரிவிக்கவும். உங்கள் தாதி ஒரு மத ஆலோசகரின் வருகைக்கு ஏற்பாடு செய்திடுவார்.
3. ஆபத்தான நிலையில் உள்ள நோயாளியின் சிகிச்சை குறித்து முடிவு செய்வது உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் மிகவும் கடினமான ஒன்றாக இருக்கக்கூடும். தேவைப்பட்டால் இது குறித்து உங்களுடனும் உங்கள் குடும்பத்தாருடனும் நாங்கள் கலந்து பேசுவோம், தேவைப்பட்டால் இனக் குழக்களின் செயல் அலுவலகத்தில் ஆலோசனைக் கேட்போம். முன்னேறிய மருத்துவ நெறிமுறைகளுக்கு இனங்க நீங்கள் மேற்கொண்ட முடிவை, அப்படி ஒரு முடிவை எடுத்திருந்தால் அதை நாங்கள் மதித்து இசைந்து நடப்போம்.
4. உங்களுக்கு மருத்துவமனைக்குள்ளோ அல்லது வெளியில் சென்றோ உங்கள் உடல்நிலை குறித்து இரண்டாவது மருத்துவ அபிப்பிராயம் கேட்பதற்கான உரிமை உள்ளது.

## இரகசியத்தன்மை மற்றும் தனிமை

1. நாங்கள் அனைத்து நோயாளி வருகைகளின் பதிவுகளையும் வைத்திருப்போம். உங்கள் மருத்துவ பதிவேடுகளை, மின்னியல் மருத்துவ பதிவேடுகள் உட்பட, மற்றும் உங்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைப் பராமரிப்புகளின் அனைத்து அம்சங்கள் குறித்தும் சட்டம் மற்றும் தொழில்முறை நெறிமுறைகளின் எல்லைக்குட்பட்டு மிகவும் இரகசியமாக வைத்திருப்போம்.
2. உங்களுக்கு சிகிச்சைப் பராமரிப்பு வழங்குபவர்களுடன் மட்டுமே இந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படும்.
3. எங்கள் அலுவலர்கள் உங்களுக்கு வழங்கும் சேவைகளை கண்காணிப்பது போன்ற மருத்துவமனை செயல்பாட்டுகளுக்காக இந்தத் தகவல் மருத்துவமனை நிர்வாகப் பிரிவில் உள்ள அலுவலர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.
4. நாங்கள் இந்தப் பகுதியில் மிகப் பெரிய மருத்துவ ஆராய்ச்சி நிலையமாகவும் செயல்பட்டு வருகிறோம். சட்டம் அல்லது மருத்துவமனை அங்கீகாரத்திற்கு உட்பட்டு மருத்துவ பதிவேடுகளை, மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளுக்காக பார்க்க வேண்டியத் தேவை ஏற்படலாம். உங்கள் பதிவேடுகளை பார்ப்பவர்கள் வெளிப்படுத்தாமைச் சட்டக் கடப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள் என்று உறுதிகூறுகிறோம்.
5. சில சமயங்களில், தொற்றுநோய் ஏற்பட்டுள்ளது போன்ற தகவல்களை தெரிவிக்க வேண்டும் என்ற சட்டத் தேவைகளுக்காக நாங்கள் தகவல்களை வெளியிட வேண்டிய தேவையேற்படலாம்.
6. மேலேக் குறிப்பிட்டத் தருணங்களைத் தவிர்த்து, இதனுடன் சம்பந்தமில்லாத ஒருவருக்கு உங்களைப் பற்றியத் தகவல்களை வெளியிட வேண்டிய தேவையேற்படும்போது நாங்கள் உங்களிடம் எழுத்துப்பூர்வ அனுமதி பெற்றிடுவோம்.
7. உங்கள் அந்தரங்கத்திற்கு மதிப்பளித்து கலந்தாலோசனைகள், பரிசோதனைகள், சிகிச்சைகள் மற்றும் நோயாளிப் பற்றிய கலந்துரையாடல் ஆகியவை மிகவும் கவனத்தோடும், சிரத்தையோடும் நடத்தப்படும்.

## உங்கள் சிகிச்சை மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விளக்கமும் தகவலும்

1. உங்கள் உடல்நிலைப் பற்றிய மருத்துவ தகவல்களை அறிந்துக்கொள்வதற்கும், அதனை உங்களுக்குப் புரியக்கூடிய வகையில் தெரிவிக்க வேண்டும் என்று கோருவதற்கான உரிமையும் உங்களுக்கு உள்ளது. நெருக்கடியான நேரங்கள் மற்றும் சிலப் பொருத்தமான சந்தர்ப்பங்களைத் தவிர்த்து, அத்தகவல்களில் பின்வருவன அடங்கும்:
   - சிகிச்சை விருப்பத்தேர்வுகள் (அறுவை சிகிச்சை முறை உட்பட)
   - தெரிந்த முடிவுகள்
   - சிகிச்சையோடு சம்பந்தப்பட்ட தெரிந்த ஆபத்துகள்
   - சிகிச்சை எடுத்துக்கொள்ளாவிட்டால் ஏற்படக்கூடிய தெரிந்த ஆபத்துகள் மற்றும் விளைவுகள்
   - எதிர்ப்பார்க்கக்கூடிய மருத்துவமனைக் கட்டணம்
   - சிகிச்சைக்குப் முடிந்து வீடு திரும்பியப் பிறகு உங்கள் தொடர் பராமரிப்புக்கு திட்டமிடுதல்
   - உங்கள் சிகிச்சைக்கு பொறுப்பேற்றுக்கொண்டுள்ள தொழில்துறை நிபுணர்களின் பெயர்கள்
2. மேலும் கூடுதலாக, நீங்கள் பின்வருவனவற்றுக்கும் கோரலாம்:
   - மருத்துவமனையின் கொள்கைக்கு உட்பட்டு மருத்துவ பதிவுகளின் பிரதி ஒன்று
   - உங்கள் மருத்துவமனைக் கட்டணங்கள் குறித்த விளக்கங்கள்
   - நீங்கள் மருத்துவமனையில் தங்குவது குறித்து கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்கள் இருந்தால்
3. அளிக்கப்படும் தகவல் உங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள சிகிச்சைக்கு சம்மதம் தெரிவிக்க வேண்டுமா அல்லது மறுக்க வேண்டுமா என்பதை முடிவு செய்ய உதவிடும்.
4. இருப்பினும், சட்டம் அனுமதிக்கும் அளவு நீங்கள் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டாம் அல்லது மருத்துவரின் அறிவுரையை மீறி மருத்துவமனையை விட்டு வெளியேறுவது என்று முடிவு செய்தீர்களானால், அதை நீங்கள் மருத்துவ ஆலோசனையை மீறி வீட்டு மருத்துவமனையை விட்டு வெளியேறுவதற்கு கோரும் ஒரு படிவமாகும்.
5. உங்கள் முடிவினால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களுக்கு நீங்கள் முழு பொறுப்பு எடுத்துக்கொள்வீர்கள்.
6. திட்டமிடப்பட்ட சிகிச்சை முறையின் முடிவுகள் மற்றும் எதிர்பாராத முடிவுகள் குறித்து உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

## கல்விசார் மருத்துவமனை

KKH, தேசத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக எதிர்கால சுகாதார பராமரிப்பு வல்லுநர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்புடைய ஒரு கல்விசார் மருத்துவமனையாகும். சில நேரங்களில் குடியிருப்பாளர்கள் மற்றும் மருத்துவ தாதிமை மற்றும் இணைச் சுகாதாரப் பிரிவுகளைச் சேர்ந்தப் பொருத்தமான மாணவர்கள் இதற்கு பொறுப்பு வகிக்கும் மருத்துவரின் மேற்பார்வையின் கீழ் பங்கேற்கலாம்.

## ஆராய்ச்சி

மனிதர்களை ஆய்வுக்குட்படுத்தும் ஒரு மருத்துவ ஆராய்ச்சியை நடத்துவதற்கு முன்னர், ஆராய்ச்சித் திட்டத்தில் பங்றேக நோயாளிகளிடமிருந்து எழுத்துப்பூர்வ ஒப்புதல் வாங்க வேண்டும். எழுத்துப்பூர்வ ஒப்புதல் அளித்தப் பிறகு நீங்கள் இதில் பங்கேற்க மறுத்திடலாம் அல்லது இந்த ஆராய்ச்சித் திட்டத்திலிருந்து எந்த கட்டத்திலும் விலகிக்கொள்ளலாம். இதில் பங்கேற்க வேண்டாம் என்ற முடிவு உங்களுக்குக் கிடைக்கவேண்டிய பராமரிப்பை எவ்விதத்திலும் பாதிக்காது.

## உறுப்பு தானம

இதயம் கல்லீரல் மற்றும் சிறுநீரக செயலிழப்பு போன்ற உறுப்பு செயலிழப்பால் அவதியுறும் நோயாளிகளுக்குச் சிறந்த தரமான வாழ்க்கை அளிப்பதற்கான ஒரே வழி உறுப்பு தானம் மட்டுமே. மனித உறுப்பு மாற்றுச் சட்டம் அல்லது HOTA, விபத்து, மூளையில் இரத்தக் கசிவு அல்லது மூளைக் கட்டி போன்றவற்றால் மருத்துவமனையில் இறந்து போனவர்களின் உறுப்புகளை (சிறுநீரகம், கல்லீரல், இதயம், விழிவெண்படலம்) உறுப்பு மாற்று செய்வதற்காக அகற்றுவதற்கு அனுமதி அளிக்கிறது. இது அனைத்து 21 அல்லது அதற்கு கூடுதலான வயதுடைய திடமான மனநிலையோடு இருக்கக்கூடிய சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகளுக்குப் பொருந்தும். அவர்கள் இதிலிருந்து விலகிக்கொண்டிருந்தால் அவர்களுக்கு இது பொருந்தாது. HOTA உயிருடன் இருப்பவர்கள் உறுப்பு தானம் அளிப்பதையும் ஒழுங்குப்படுத்துகிறது.

உறுப்பு மாற்று சிகிச்சை பல நோயாளிகளுக்கு ஒரு புது வாழ்க்கையை அளிக்கிறது. நீங்கள் இறந்த பிறகு உங்கள் உறுப்புகளை தானமளிக்க உங்களுக்கு விருப்பமில்லை என்றால் நீங்கள் HOTA-விலிருந்து விலகிக்கொள்ளலாம். உங்கள் விருப்பத்திற்கு மதிப்பளித்திடும். விலகிக்கொள்வதற்கான படிவத்தை மருத்துவமனை, பலதுறை மருந்தகங்கள், அல்லது தேசிய உறுப்பு மாற்றுப் பிரிவிலிருந்துக் (c/o புளோக் 3, லெவல் 1 சிங்கப்பூர் பொது மருத்துவமனை சிங்கப்பூர் 169608, தொலைப்பேசி: 63214390) கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். மேல் விவரங்களுக்கு, தயவுசெய்து 1800-2254-122 என்ற HOTA-வின் நேரடித் தொலைப்பேசி எண்ணைத் தொடர்புகொள்ளுங்கள். அல்லது **www.moh.gov.sg** என்ற MOH இணையதளத்திற்குச் செல்லுங்கள்.